



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், உள்ளாட்சி தேர்தல் நடத்துவது தொடர்பாக மண்டல அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (30.05.2016) நடைபெற்றது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. டி. ஹெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 307/2016 நாள்: 30.05.2016

## பத்திரிகைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊரகம் உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறவுள்ள சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2016-க்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 30.05.2016 அன்று மாலை 4.00 மணிக்கு நாஞ்சில் கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), உதவி இயக்குநர் நிலையிலான மண்டல அலுவலர்கள் (Nodal Officer) அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ) / (கி.ஊ) ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்காணும் ஆய்வு கூட்டத்தில் சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2016-க்கு வார்டு வாரியான மற்றும் இன வாரியான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேற்கண்ட பணிகள் 01.06.2016-ல் ஆரம்பித்து 06.06.2016-க்குள் முடிக்கப்படவேண்டும். முடிவுற்ற பணிகள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களால் கள ஆய்வில் சரிபார்க்கப்பட வேண்டும். சரிபார்க்கும் பணிகள் 09.06.2016-க்குள் முடிக்கப்பட வேண்டும். தொடர்ந்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உதவி இயக்குநர் நிலையிலான மண்டல அலுவலர்களால் (Cross Check) சோதனை ஆய்வு செய்யப்பட வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிராம ஊராட்சி வார்டு வாரியான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகளை 15.06.2016-க்குள் முடித்து சான்றளிக்க வேண்டும். இதில் எந்தவிதமான தவறுகளும் நிகழாதவண்ணம் மிகச் சரியான முறையில் வாக்களார் பட்டியல் தயாரிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.